# நாமக்கல் மாவட்டம் மேல்முகம் ஊராட்சி, அத்தப்பம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டம்

## கலெக்டர் ச.உமா பங்கேற்பு



**நாமக்கல்,நவ.24-**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், மேல்முகம் ஊராட்சி, அத்தப்பம்பட்டி கிராமத்தில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு *(23.11.2024)* நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் நாமக்கல் கலெக்டர் மருத்துவர் ச.உமா, , நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கலெக்டர் மருத்துவர் ச.உமா, தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மாதம் ரூ.*1,000/-* வழங்கும் திட்டம், முதியோர் உதவித் தொகை உயர்வு, அரசுப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் பசியினை போக்கும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், மாணவிகள் உயர் கல்வி பயில்வதை ஊக்குவித்திட மாதம் ரூ.*1,000/-* வழங்கும் புதுமைப் பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம், எடை குறைபாடுடன் பிறந்த குழந்தைகளின் ஆரோக்கியத்தை பாதுகாத்திட ஊட்டசத்து உறுதி செய் திட்டம் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு வீடு கட்ட ரூ.*3.50* இலட்சம் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள். மேலும், கர்ப்பிணி பெண்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்து *10* மாதங்களும் பரிசோதனை செய்து கொண்டு தங்கள் உடல் நலனையும், குழந்தையின் வளர்ச்சியையும் அறிந்து ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு சார்பில் ஊட்டசத்தை உறுதி செய் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு புரோட்டீன் பவுடர், பேரிச்சம்பழம், குடற்புழு நீக்க மருந்து உள்ளிட்ட பல்வேறு பொருட்களுடன் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு வருகின்றது. குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் தவறாமல் போட்டு, ஆரோக்கியமாக வளர்க்க வேண்டும். பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளை கட்டாயம் பள்ளிக்கு அனுப்பிட வேண்டும். குழந்தைகளுக்கு கட்டாயம் கல்வி அளிப்பது நம் அனைவரது கடமை ஆகும். தமிழ்நாடு அரசும் கல்வியை ஊக்குவித்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

பெண்களை தொழில் முனைவோர்களாக ஊக்குவித்திட தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கடனுதவி வழங்கி வருகின்றார்கள். இப்பகுதியில் பெண்கள் வீடுகளிலேயே விசைத்தறி மூலம் சேலை நெசவு செய்து சுய தொழில் மேற்கொண்டு வருமானம் ஈட்டி வருகின்றார்கள். இதுபோல அரசின் திட்டங்களை பயன்படுத்தி கொண்டு தங்கள் பொருளாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும்.

மேலும் பெண்கள் தங்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், தங்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து தகவல் தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் *1098* மற்றும் *181* உள்ளிட்ட எண்களில் புகார் அளிக்கலாம். புகார் அளிப்பவர்களின் விபரம் இரகசியமாக பாதுகாக்கப்படும். இன்றைய நவீன உலகில் குழந்தைகளுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. நம் கிராமம் மற்றும் நம் குழந்தைகளை தடைசெய்யப்பட்ட போதை பொருட்களின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க வேண்டியது நம் அனைவரது கடமையாகும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கல்வியினை வழங்கி அவர்களை சமுதாயத்தில் உயர்நிலை அடைய உறுதுணையாக இருக்க வேண்டும் என நாமக்கல் கலெக்டர் மருத்துவர் ச.உமா, தெரிவித்தார்.

தொடர்ந்து, இக்கூட்டத்தில் கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள், கிராம ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் பொன்னி மகளிர் சுய உதவிக் குழுவினர் ஆகியோரை கலெக்டர் மருத்துவர் ச.உமா, சிறப்பித்தார்.

இக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்) திட்டம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டம், ஜல் ஜீவன் இயக்கம், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம், கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு, கூட்டாண்மை வாழ்வாதாரம் மற்றும் இதர பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ரவிச்சந்திரன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சசிகலா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு கல்வராயன் பகுதி மக்களின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து தனிகவனம் செலுத்தி, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் நலத்திட்ட உதவிகளை வழங்கி தகவல்

**சேலம்,நவ.24-**

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கருமந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் *(23.11.2024)* நடைபெற்ற நிகழ்ச்சியில் கருமந்துறை பகுதியைச்சார்ந்த பழங்குடியினர் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த *3 ½* ஆண்டுகளில் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பழங்குடியின மக்கள் தங்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும், கல்வியறிவில் மேம்பாடு, பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் சேலம் மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, உயர்மட்ட நீர்தேக்க தொட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை நிறைவேற்றி தந்துள்ளார்கள். பழங்குடியின மாணவ, மாணவிகள் எதிர்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கோடு சேலம் மாவட்டத்தில் பழங்குடியினர் நலத்துறை மூலம் கருமந்துறை பகுதிகளில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் கட்டிடங்கள் கட்டுதல், சமையலறை கூடம் கட்டுதல் உள்ளிட்ட பணிக்கு ரூ.*1.38* கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



மகளிர் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் இன்றையதினம் *300* கறவை மாடுகள் ரூ.*1.05* கோடி மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது. அதேபோன்று ரூ.*1.93* கோடி மதிப்பீட்டில் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு கல்வராயன் பகுதி மக்களின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து தனிகவனம் செலுத்தி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் சேலம் மாவட்டத்திலேயே அதிகளவிலான கலைஞர் கனவு இல்ல பயனாளிகளைக்கொண்ட ஊராட்சி ஒன்றியமாக பெத்தநாயக்கன்பாளையம் திகழ்கிறது. அதில் கருமந்துறை பகுதிக்குட்பட்ட தெற்கு நாடு, வடக்கு நாடு, மேல் நாடு மற்றும் கீழ்நாடு ஆகிய ஊராட்சிகளில் அதிகளவிலான கலைஞர் கனவு இல்ல பயனாளிகள் பயன்பெறுகின்றனர். மேலும், சேலம் மாவட்டத்தின் மலைகிராமங்களான பச்சமலை, கல்வராயன் மலை, கருமந்துறை, பாலமலை உள்ளிட்ட மலைகிரமங்களில் கூட்டுறவுத்துறையின் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு அதிகளவிலான கடன்கள் வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகள், மாணவ, மாணவியர்கள், தொழிற்துறையினர், தொழில்முனைவோர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் சிறப்பான நல்லாட்சி நடத்தி வருகிறார்கள்.

இன்றையதினம் நடைபெறும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு *300* பழங்குடியினர் மக்களுக்கு தலா ரூ.*35,000/-* வீதம் மொத்தம் ரூ.*1.05* கோடி மதிப்பிலான கறவை மாடுகளும்,

வருவாய்த்துறையின் சார்பில் *8* பயனாளிகளுக்கு மலைவாழ் மக்கள் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு பெற தடையில்லாச்சான்றும், *11* பயனாளிகளுக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் ஆணை, *13* பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் ஆணை, வேளாண்மைத்துறையின் மூலம் *4* பயனாளிகளுக்கு ரூ.*1.05* இலட்சம் மதிப்பிலும், தோட்டக்கலைத்துறையின் மூலம் *10* பயனாளிகளுக்கு ரூ.*1.63* இலட்சம் மதிப்பிலும், வேளாண் இடுபொருட்கள் மற்றும் உபகரணங்களும், தாட்கோ மூலம் *9* பயனாளிகளுக்கு ரூ.*9.00* இலட்சம் மதிப்பிலான கடனுதவியும்,

கூட்டுறவுத்துறையின் சின்னக்கல்ராயன் மற்றும் பெரிய கல்ராயன் லேம்ப் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் *123* உறுப்பினர்களுக்கு பயிர்க்கடனாக ரூ.*1.4* கோடியும், *66* மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.*34.00* இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளும் என மொத்தம் *539* பயாளிகளுக்கு ரூ.*2.91* கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியின் வாயிலாக நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் தங்கள் வாழ்க்கையில் மென்மேலும் பயன்பெற எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் தா.பிரியதர்ஷினி, பழங்குடியினர் நலத்துறை திட்ட அலுவலர் சுகந்தி பரிமளம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டாட்சியர் கு.ஜெயகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் வடக்குநாடு ஊராட்சி மன்ற தலைவர் தாடி வெங்கடேசன், தெற்கு நாடு ஊராட்சி மன்ற தலைவர் பூங்கொடி சிவராமன், சமூக ஆர்வலர் சிவராமன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# கே. நடுஅள்ளி ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்



**தர்மபுரி,நவ.24-**

தர்மபுரி மாவட்டம் கே. நடுஅள்ளி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் வரவு செலவு கணக்குகள் பார்க்கப்பட்டது *11* துப்புரவு பணியாளர்களுக்கு பாராட்டு தெரிவித்து கௌரவிக்கப்பட்டது *33* சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு கௌரவிக்கப்பட்டது. கூட்டத்தில் துணைத் தலைவர் லதா கோவிந்தராஜ் ஊராட்சி செயலாளர் சக்கரவேல் வார்டு உறுப்பினர்கள் உதவி வேளாண்மை அலுவலர் பெரியசாமி அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு மானியத்தில் கைப்பேசி மூலம் பம்ப்செட் கட்டுப்படுத்தும் கருவிகள் வழங்கப்பட உள்ளது

## கலெக்டர் கே.எம்.சரயு தகவல்

**கிருஷ்ணகிரி,நவ.24-**

கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் விவசாயிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறை மூலம் கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்ப் செட் கட்டுப்படுத்தும் கருவி மானியத்தில் வழங்கப்பட்டு உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பொதுப்பிரிவில் *104* எண்களும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு *10* எண்களும் மொத்தம் *114* எண்களுக்கு *7,98* இலட்சம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இரவு நேரங்கள் மற்றும் மழைக்காலங்களில் வயல்வெளிகளில் உள்ள பம்ப் செட்டுகளை இயக்க செல்லும்போது பாம்புக்கடி, விஷப்பூச்சிக் கடி உள்ளிட்ட பிரச்சனைகளில் சிக்க நேரிடுகிறது. இதை தவிர்க்கும் வகையில், தங்களது பம்ப் செட்டுகளை வீடுகளில் இருந்தபடியே இயக்கும் கருவி மானியத்தில் வழங்கப்படுகிறது. இதை பயன்படுத்தி விவசாய கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள பம்ப் செட்டுகளை தொலைவில் இருந்தபடியோ, வெளியூரில் இருந்தபடியோ கைப்பேசியில் மூலம் இயக்கிடவும், நிறுத்திடவும் செய்யலாம். இதற்கு மானியமாக சிறு குறு விவசாயி பெண் விவசாயி ஆதிதிராவிட வகுப்பினர் பழங்குடி வகுப்பினர் ஆகியோருக்கு கருவியின் மொத்த விலையில் *50* சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.*7000*ம்- மற்ற விவசாயிகளுக்கு மொத்த செலவில் *40* சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.*5000*ம்- வழங்கப்படும். விருப்பமுள்ள விவசாயிகள் கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களையும், மேலும், கிருஷ்ணகிரி உபகோட்டம் : உதவி செயற் பொறியாளர் (வே.பொ) கு.சந்திரா., (அலைபேசி:*9442007040*) மற்றும் ஒசூர் உபகோட்டம்: உதவி செயற் பொறியாளர் (வே.பொ) ந.சிவக்குமார் (அலைபேசி எண்: *6383815967*) எண்களில் தொடர்பு கொள்ளலாம் என கலெக்டர் கே.எம்.சரயு தெரிவித்துள்ளார்.

# சேலம் ஊராட்சி ஒன்றியம், தளவாய்ப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டம்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி பங்கேற்றார்



**சேலம்,நவ.24-**

சேலம் மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியம், தளவாய்ப்பட்டி ஊராட்சியில் *(23.11.2024)* நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி பார்வையாளராக கலந்து கொண்டார். இக்கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க நவம்பர் 1-ஆம் நாளினை தமிழ்நாட்டின் உள்ளாட்சிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நவம்பர் 1 அன்று அரசு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டதால் இன்றைய தினம் *23.11.2024* தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது. அந்த வகையில் சேலம் மாவட்டத்தில் உள்ள *385* கிராம ஊராட்சிகளிலும் இன்றைய தினம் கிராம சபை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இக்கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்கள் அடங்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் பொதுமக்களின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டது.

குறிப்பாக தூய்மைப்பணியாளர்களிடம் பொதுமக்கள் தங்களது குப்பைகளை தரம் பிரித்து வழங்கிட வேண்டும். அதேபோன்று சாலை ஓரத்தில் குப்பைகளை கொட்டுதல் மற்றும் எரியூட்டுதலை தவிர்த்தல் வேண்டும் என்பது குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அதேபோன்று கிராம சபைக்கூட்டத்தில் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டமும் நடைபெற்றது. இதில் குழந்தைகள் பாதுகாப்பு சார்ந்த கூட்டப்பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் பிற முக்கிய திட்டங்கள் குறித்த விபரங்கள் பொதுமக்கள் மத்தியில் விவாதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தெரிவித்தார்.

முன்னதாக தளவாய்ப்பட்டி கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்து வரும் தூய்மைப் பணியாளர்களையும், அதேபோன்று, சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகாசக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களையும் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி பாராட்டி கௌரவித்தார்கள். இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) லலித் ஆதித்ய நீலம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சங்கமித்திரை, சேலம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் மலர்க்கொடி ராஜா, தளவாய்ப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ராஜா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

**தலைகவசம்
உயிர் கவசம்**

**கனம் சேலம் மாவட்ட சிறப்பு விபத்து சார்பு நீதிபதி எண்.2**
**M.C.O.P.No. 157/2024**

பிரபாகரன், த/பெ.குமார்,
க.எண்.114, Klathu Street,
குளத்தூர் தெரு, பரனூர்,
விழுப்புரம் மாவட்டம்.
...Petitioner

இடையே

R.கமலநாதன், த/பெ.ரங்க நாயுடு,
க.எண்.31-ஏ, ஜென்டிகானூர்,
நாயக்கனூர் அஞ்சல்,
கிருஷ்ணகிரி - 635 307.
புதிய முகவரி : 4/4டி, ராமாபுரம்,
பெருமாகவுண்டம்பட்டி, வேம்படிதாளம்,
கல்பாரப்பட்டி,சேலம் - 637 504.
...3rd Respondent

3 ம் எதிர்மனுதாரருக்கு
நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தாக்கல் செய்த M.C.O.P.No. 157/2024 வழக்கில் கனம் சேலம் மாவட்ட சிறப்பு விபத்து சார்பு நீதிமன்றம் எண். II ல் வருகின்ற **19.12.2024** ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி 3 ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி பதில் அளிக்கவேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
J.சுதர்சன்,B.A.B.L.,
வழக்கறிஞர், சேலம்.

**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE No - I, SALEM.**
**M.C.O.P.No. 1279/2024**

சந்துரு
...Petitioner

இடையே

R.வெங்கிடுசாமி, த/பெ.ரங்கநாதன்,
க.எண்.436, வாசுகி நகர்,
தட்டாங்குட்டை அஞ்சல்,
குமாரபாளையம் தாலுக்கா,
நாமக்கல் மாவட்டம்.
...1st Respondent

1 ம் எதிர்மனுதாரருக்கு
நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தாக்கல் செய்த M.C.O.P.No. 1279/2024 வழக்கில் கனம் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண். I ல் வருகின்ற **03.12.2024** ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி பதில் அளிக்கவேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
R.ரமேஷ்,B.A.B.L.,
வழக்கறிஞர், சேலம்.

**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE No - I, SALEM.**
**M.C.O.P.No. 1277/2024**

தங்கவேல்
...Petitioner

இடையே

R.வெங்கிடுசாமி, த/பெ.ரங்கநாதன்,
க.எண்.436, வாசுகி நகர்,
தட்டாங்குட்டை அஞ்சல்,
குமாரபாளையம் தாலுக்கா,
நாமக்கல் மாவட்டம்.
...1st Respondent

1 ம் எதிர்மனுதாரருக்கு
நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தாக்கல் செய்த M.C.O.P.No. 1277/2024 வழக்கில் கனம் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண். I ல் வருகின்ற **03.12.2024** ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி பதில் அளிக்கவேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
R.ரமேஷ்,B.A.B.L.,
வழக்கறிஞர், சேலம்.

**சேலம் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிபதி நீதிமன்றம்**
**O.S.No. 482/2024**

அருள்மிகு பச்சைபட்டினி மாரியம்மன் திருக்கோவில்,
Rep by its P.குருமூர்த்தி
...வாதி

/Vs /

1. உயர் திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம். மற்றும் 6 பேர்கள்
...பிரதிவாதிகள்

பொது அறிவிப்பு

வாதி சேலம் சிவதாபுரம் அருள்மிகு பச்சைபட்டினி மாரியம்மன் கோவிலின் தாம்கர்த்தா என்ற முறையில் மேற்படி கோவில் நிலமானது TS No. 22 ல் உள்ள ஒரு பகுதியில் பொதுப்பணிதுறையால் அங்கன்வாடி மையம் அமைக்க முயற்சி செய்து வருவதை வாதி தர்மகர்த்தா என்ற முறையில் கோவில் நிலத்தில் எந்தவிதமான கட்டுமான பணியும் செய்யக்கூடாது என வாதி சேலம் முதன்மை மாவட்ட உரிமையியல்நீதிமன்றத்தில் O.S.No. 482/2024 என்ற வழக்கை கோவிலின் பிரதிநிதி என்ற முறையில் மேற்படி வழக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு வருகின்ற **18.12.2024** -ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சம்மந்தமாக எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் வருகின்ற **18.12.2024** -ம் தேதியன்று காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம் என இந்த பொது அறிவிப்பின் வாயிலாக வாதி தெரிவித்துக் கொள்கிறார் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
M.சந்திரன்,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.**
பி.இ.சிய. எண். 244 / 2023 / டி

நல்லம்மாள், W / O. பழனியப்பன்,
14/ 180ஏ, குட்டக்காடு, வேங்கிபாளையம்
மோரூர் பிட்–1 கிராமம்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர் அவர்கள்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
.... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது பாட்டி பெருமாயி என்பவர் கடந்த 17 – 08 –1995 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
M. TAMILARASAN. M.A., B.L.,
ADVOCATE, SANKARI.

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.**
பி.இ.சிய. எண். 245 / 2023 / டி

நல்லம்மாள், W / O. பழனியப்பன்,
14/ 180ஏ, குட்டக்காடு, வேங்கிபாளையம்
மோரூர் பிட்–1 கிராமம்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்

/ எதிராக /

வட்டாட்சியர் அவர்கள்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
.... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை பெரியண்ணன் என்பவர் கடந்த 25 – 06 –1984 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
M. TAMILARASAN. M.A., B.L.,
ADVOCATE, SANKARI.

**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE No - II, SALEM.**
**M.C.O.P.No. 1442/2024**

B.ஈஸ்வரன் ஆண்டனி,
த/பெ.பாக்கியநாதன்,
க.எண்.34-36, கீழ் அழகாபுரம்,
ஏற்காடு, சேலம் மாவட்டம்.
...Petitioner/Petitioner

இடையே

S.சங்கரன், த/பெ.சுப்ரமணியம்,
க.எண்.9, ரமணி இல்லம், ராயல் கார்டன், 1வது கிராஸ், மெய்யனூர்,
அழகாபுரம், சேலம்.
...1st Respondent
/ 1st Respondent

1 ம் எதிர்மனுதாரருக்கு
நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தாக்கல் செய்த M.C.O.P.No. 1442/2024 வழக்கில் கனம் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண். II ல் வருகின்ற **20.12.2024** ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி பதில் அளிக்கவேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
C.ரமேஷ்,B.A.B.L.,
வழக்கறிஞர், சேலம்.

**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE No - II, SALEM.**
**M.C.O.P.No. 1435/2024**

U.கௌசிக், த/பெ.உத்திரசாமி,
பெரியசேரமிட்டாம்பாளையம்,
தேவனாங்குறிச்சி, நாமக்கல்.
...Petitioner/Petitioner

இடையே

S.சங்கரன், த/பெ.சுப்ரமணியம்,
க.எண்.9, ரமணி இல்லம், ராயல் கார்டன், 1வது கிராஸ், மெய்யனூர்,
அழகாபுரம், சேலம்.
...1st Respondent
/ 1st Respondent

1 ம் எதிர்மனுதாரருக்கு
நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தாக்கல் செய்த M.C.O.P.No. 1435/2024 வழக்கில் கனம் சிறப்பு சார்பு நீதிமன்றம் எண். II ல் வருகின்ற **20.12.2024** ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி பதில் அளிக்கவேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
C.ரமேஷ்,B.A.B.L.,
வழக்கறிஞர், சேலம்.

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR.**
**O.S.No. 213/2022**

A.Mani, S/o. Arunachalam,
D.No. 38, Korani Kadu,
11th Ward, Melathombai (PO),
Attur (TK), Salem (DT).
...மனுதாரர் / வாதி

/Vs /

1. D.Palanisamy,
S/o. Dhanapal Pandaram,
Near Kaatu Kottai,
Thengumarai Raod, Punalvasal
Village, Attur (TK), Salem (DT).
...1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வழக்கின் வாதி தங்களுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி மேற்படி நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்துள்ளார். மேற்படி தாவா வழக்கானது வருகின்ற **04.12.2024** -ம் தேதியில் ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கானது தங்களுக்கு எதிராக தாவா ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
L.மணிவண்ணன்,M.L.,
வழக்கறிஞர்,சேலம்.

**கனம் சேலம் மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றம்(PSJ)**
**I.A.No. 4/2024 In I.A.No. 3/2023**
**In ON AS No. /2023 In O.S.No. 442/2012**

T.செல்லபெருமாள்
...மனுதாரர் / மேல்முறையீட்டாளர்

/Vs /

1. K.ஜெயசீலன்
2. S.பார்த்தீபன்
மேற்படி இருவரின் முகவரி :
பொட்டக்காடு, பாலம்பட்டி கிராமம்,
வீரபாண்டி வட்டம்,
சேலம் தாலுக்கா, சேலம் மாவட்டம்.
...3,4 ம் எதிர்மனுதாரர்கள்

3,4 ம் எதிர்மனுதாரர்களுக்கு
அறிவிப்பு

மேற்படி வழக்கானது 3,4 ம் எதிர்மனுதாரர்கள் தங்களின் வருகைக்காக வருகின்ற **05.12.2024** -ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்படி தேதியன்று நீங்கள் நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கானது தங்களுக்கெதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
J.கோபிநாத்,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

